இந்து சமய அறநிலையத்துறை

**அனுப்புநர்**

திரு.ஜெ.குமரகுருபரன்,இ.ஆ.ப.,
ஆணையர்,
சென்னை.

**பெறுநர்**

அனைத்து இணை ஆணையர்கள்
அனைத்து இணை ஆணையர் / செயல்அலுவலர்கள்
அனைத்து துணை ஆணையர் / செயல் அலுவலர்கள்
அனைத்து உதவி ஆணையர்கள்
அனைத்து உதவி ஆணையர் / செயல் அலுவலர்கள்

ந.க.எண். 66400/2021/இசட்1/நாள். 15.09.2021

ஐயா,

பொருள் : தமிழ்நாடு சட்ட மன்ற அறிவிப்பு 2021–2022 – இந்து சமய அறநிலையத்துறை – சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அறிவிப்பு எண்.10னை செயல்படுத்துவது – குறித்து

பார்வை : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள்.04.09.2021

------

தமிழ்நாடு சட்ட மன்ற அறிவிப்பு 2021–2022ல், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

அறிவிப்பு எண்.10

" மணமக்களில் ஒருவர் மாற்றுத் திறனாளியாக இருப்பின் திருக்கோயிலில் அவர்களுக்கு நடைபெறும் திருமணத்திற்கான கட்டணம் வசூலிக்கப்படமாட்டாது. மேலும், திருக்கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றால் மண்டபத்திற்கான பராமரிப்புக் கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படும்."

எனவே, மேற்படி சட்டப்பேரவை அறிவிப்பினை செயல்படுத்திடும் வகையில், தங்கள் நிர்வாகத்தின் கீழ் உள்ள அனைத்து திருக்கோயில்களில் நடைபெறும் திருமணங்களில் " மணமக்களில் ஒருவர் மாற்றுத் திறனாளியாக இருப்பின் திருக்கோயிலில் அவர்களுக்கு நடைபெறும் திருமணத்திற்கான கட்டணம் வசூலிக்கக்கூடாது. மேலும், திருக்கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றால் மண்டபத்திற்கான பராமரிப்புக் கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படவேண்டும் " என்று உத்தரவிடப்படுகின்றது.

இச்சுற்றறிக்கையினை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதலை மறு அஞ்சலில் அனுப்புமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்களுக்கு ஒருவாரத்துக்குள் அறிக்கை அனுப்புமாறும் அனைத்து சார்நிலை அலுவலர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/–ஜெ.குமரகுருபரன்
ஆணையர்

/உண்மைநகல் உத்தரவுப்படி/

15/9/2021

கண்காணிப்பாளர்

15/09/21

நகல்
இவ்வலுவலக ஜி, எச் மற்றும் யூ பிரிவுகள் ( எண்ணிடல் மூலம்)
(சார்நிலை அலுவலர்களிடமிருந்து விவரங்களை பெற்று தொகுத்து வழங்கும் பொருட்டு)